**கலேவல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இறுதி இருப்பு மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே 13 வருடங்களுக்கு முன்னிருந்து காணப்படுகின்ற ரூபா 1,166,909 தொகையான வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,203,759 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 82 மயானங்களுக்குரிய 112 ஏக்கர், 1 ரூட் மற்றும் 17 பேர்ச் காணியின் அளவினை சபைக்கு கையேற்கப்பட்டு மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 262,842 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 308,497,465 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில்

காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 125,249,601 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 19,983,235 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 07 கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 165,256,798 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 123 ஆம் பிரிவு | வாகனங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக உப விதிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 189 | 2004 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்திருந்த மதிப்பிழந்திருந்த ரூபா 47,917 தொகையான காசோலையொன்று தொடர்பாக 13 ஆண்டு களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருடங்களை கடந்த ரூபா 1,387,034 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 1645 | மீளாய்வாண்டிற்காக சபையின் 19 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது விலை விபரங்கள் கோரி நேரடியாக காப்புறுதி வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், விலைகோரல் மேற்கொள்ளாமல் காப்புறுதி முகவர்கள் மூலம் ரூபா 704,135 ஆன தொகைக்கு காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | கடைகளின் வாடகை திருத்தம் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் செய்யப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான கடைகளுக்குரிய வாடகை திருத்தம் 30 ஆண்டுகள் அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

### 1.3.7 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாமல் கொடுக்கல் வாங்கல்கள்

கலேவல வியாபாரத் தொகுதியின் புதிய கட்டிடத்தின் 15 ஆம் இலக்க கடைக்காக 2007 வாடகை மதிப்பீடு ரூபா 6,750 ஆக இருக்கையில் 2013 செப்தம்பர் 30 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் பேரில் மாதாந்த வாடகை ரூபா 3,500 வீதம் வரும் வகையில் 2013 திசெம்பர் 2 ஆந் திகதி முதல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் வரை சபைக்கு ரூபா 120,250 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,739,367 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,369,664 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 7,369,703 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி அறவீடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் கூடிய பெறுமதியுடைய வீதவரி அலகுகளிலிருந்து காணப்பட்ட நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஆதன வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 1,637,440 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பட்டியல் இடப்பட்ட வரியின் அளவு ரூபா 1,903,676 ஆக இருந்தது. அதில் 2016 ஆம் ஆண்டில் 47% சஆன ரூபா 896,529 மாத்திரம் இருந்தமை வீதவரி அறவீட்டில் பலவீனமான நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 56,029 ஆன நிலுவை மீதியில் ஆண்டில் ரூபா 396 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 5 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதி ரூபா 84,581 ஆக இருந்ததுடன், அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

05 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 691,370 ஆக இருந்ததுடன், அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 106,725 தொகையாக இருந்ததுடன் அம்மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 46,423 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,682,950 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 16,829,167 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கந்துரட்ட அபிவிருத்தி வங்கிக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தில் 19(1) மற்றும் (xiv) பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமொன்று இல்லாமல் கலேவல பிரதேச சபைக்குரிய மொத்த சந்தை வளவில் உள்ள கட்டிடமொன்று கந்துரட்ட அபிவிருத்தி வங்கிக்கு ரூபா 38,000 தொகைக்கு 2008 ஆம் ஆண்டு முதல் 2036 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணத்திற்காக வாடகையை ஈடு செய்யப்பட வேண்டுமென உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வங்கியால் உரிய நிர்மாணம் தொடர்பாக செலவிடப்பட்ட கிரயம் தொடர்பாக இணக்கப்பாடொன்றை சபையுடன் ஏற்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த கட்டிடத்திற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 2016 திசெம்பர் 08 ஆந் திகதிய ME/RP/961 கடிதத்தின் மூலம் மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 70,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாதாந்த வாடகை திருத்தப்பட்ட வாடகை கட்டண அறவீடு தொடர்பாக ஏற்பாடுகளை உடன்படிக்கையில் உள்ளடக்காத காரணத்தினால் உரிய மதிப்பீட்டு வாடகையை செலுத்துவதற்கு கந்துரட்ட அபிவிருத்தி வங்கி இணங்கியிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 6 வியாபார தொகுதிகளுக்குரிய மதிப்பிடப்பட்ட வாடகை இறுதியாக திருத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், குத்தகை வாடகை திருத்தல் மற்றும் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிம்சவிய அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்று முறையான மதிப்பீடொன்றில்லாமல் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் ரூபா 25,000 ஆன மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 125 மற்றும் 126 இன் பிரகாரம் பீ.எஸ் 12 மாதிரியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குப்பண செலவின பேரேடொன்றில் பதிவு செய்வதால் ஒவ்வொரு செலவின பேரேட்டின் பேரில் வரும் செலவினம் தொடர்பாகவும் மாதாந்த செலவுப் பொழிப்புடன் பரீட்சிக்கப்படக் கூடிய வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குப் பண பேரேட்டு விபரங்களுடன் எழுதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் செலவினப் பேரேடு மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற 9 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 05 வாகனங்களை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக முறையான வருமானப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------

2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் சேவையை இடைநிறுத்தியதன் பேரில் அந்த உத்தியோகத்தர்கள் சபைக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தனர். இதற்காக சபை நிதியத்திலிருந்து சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 300,000 செலவிடப்பட்டிருந்தது..

### 3.4 விளைவற்ற / குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 3,000,000 பெறுமதியான கலி பவுசரும் ரூபா 79,000 பெறுமதியான குபோட்டா கை உழவு இயந்திரமும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) திண்மக்கழிவுப் பொருள் டேலரொன்றும் உழவு இயந்திர டேலரும் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன்அவற்றை திருத்தி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்புபட்டிருக்கவில்லை.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபை வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரங்களை உரிய திகதிகளில் பெற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக தண்டப்பணமாக ரூபா 31,230 உம் தாமதக் கட்டணமாக ரூபா 4,435 உம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பங்கல வீதி முதல் புல்நெல வரை செல்லும் குறுக்கு வீதியை அபிவிருத்தி செய்தல்

பொது நிதியத்தின் கீழ் இவ்வீதி 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 செலவிடப்பட்டு கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் வீதியின் இரண்டு பகுதிகளும் கொங்கிரீட் பகுதிகளுடன் கொங்கிரீட் கற்கள் பரப்பப்பட்ட பகுதி பொருத்தப்படாதிருந்ததால் வீதியின் இரண்டு பக்கங்கள் வெடித்திருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) கலேவல பேரூந்து தரிப்பு நிலையத்திற்காக கிரவல் கற்கள் இடல்

(i) பொது நிதியத்தின் மூலம் கலேவல பேரூந்து நிறுத்துமிட வளவிற்கு கிரவல் கற்கள் வழங்கல் ரூபா 228,195 இற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் நேர் கூலி அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இங்கு பஸ் நிறுத்துமிடத்தில் சரியான அளவீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 52 கியுப் கிரவல் கற்களுக்காக ஒன்று ரூபா 1,050 வீதம் ரூபா 54,600 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கிரவல் கற்கள் வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்காக கேள்விச் சபை கூடி தீர்மானம் எடுத்திருந்த போதிலும் 2016 பெப்ரவரி 19 ஆந் திகதி அவ்வாண்டு சனவரி 26 ஆந் திகதியிலிருந்து கிரவல் கங்கள் போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது.

### (இ) கலேவல வாரச் சந்தை புனரமைப்பும் புதிதாக பகுதியொன்றைச் சேர்த்தலும்

மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கலேவல வாரச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக மஹவெலயாய விவசாய அமைப்புடன் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி உடன்படிக்கை செய்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததன் பின்னர் ரூபா 966,074 தொகை ஒப்பந்த சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அங்கு 12 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 43.16 கதுர மீற்றர் நிலத்திற்கு கொங்கிரீட் இடப்பட்டு சாந்து பூசுவதற்கு ஒரு சதுர மீற்றர் ரூபா 1,223 வீதம் ரூபா 52,784 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வேலை விடயத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பகுதி மற்றும் கொங்கிரீட் மற்றும் சாந்து உரிய நியமத்தின் பிரகாரம் இல்லாதிருந்தமை நிலையப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.7 செயற்திட்ட தாமதம்

மாகாண சபை உறுப்பினர் மானியத்தின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக பொருள் உதவி வழங்கப்பட்டிருந்த இரண்டு நலனாளிகளுக்கு அப்பொருட்களையும் உதவிகளையும் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மத்திய மாகாண சுற்றாடல் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 3 மில்லியன் நிதி உதவியின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது மேவுகையுடன் கூடிய கழிவுகளை அகற்றும் 02 வடிகாண்கள் (100''x25'') மற்றும் கழிவுப் பொருட்களை வகைப்படுத்துவதற்கான தளம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 212,556 செலவு செய்து கூட்டுப்பசளை தளத்தின் கூரை திருத்தியமைக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுன்ற 2.5 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகளில் உக்கலடையும் கழிவுப்பொருள் வடிகாணுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும், அவ் வடிகாணில் கழிவுகள் உக்கலடையும் செயற்பாடு முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கழிவுப்பொருட்கள் வடிகாண் முறைமைக்கு சேரும் போது உக்காத கழிவுப்பொருட்கள் முழுமையாக அகற்றப்பட்டு வடிகாண் முறைமைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மலக்கழிகளை வெளியேற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று சபையினால் இனங்காணப்பட்டிருக்வில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 50 செலவினங்களுக்கான ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,868,500 தொகையான நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 30 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 7,096,500 தொகை வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(இ) 115 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 9% முதல் 100% வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் நிர்வாகம்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்

(உ) வருமான நிருவாகம்